லயன் காமிக்ஸ்

# மரணக் கோட்டை!





மயிர்க் கூச்செரிய
வைக்கும் சித்திரக்
கதைகள் !
பயங்கரமான
பேய்க்
கதைகள்
இன்னும்
எத்தனை
எத்தனையோ
திகிலூட்டும்
அம்சங்களுடன்
வரவிருக்கிறது!
திகில்!
விரைவில்!
ஏஜென்ஸி விபரங்களுக்கு:
பிரகாஷ் பப்ளிஷர்ஸ்
த.பெ. 374. சிவகாசி-626123.

# மரணக் கோட்டை!





சாலைவழியே சென்றுகொண்டிருந்த ஹிப்பிகள் இருவர் செயிண்ட் மௌர் மாளிகையை சுற்றிலும் பரந்து விரிந்துகிடந்த அடர்ந்த கானகப் பகுதியினுள் அத்துமீறி நுழைந்தனர்.
சரியாகப்படவில்லை பெட்ஸி இங்கே புலி சிங்கங்கள் நடமாடுவதாக கேள்வி
ஒன்றிரண்டு இருக்கக் கூடும் ஆனாலும் நீ சரியான தொடை நடுங்கி !
இப்படி குறுக்குப் பாதையில் போனால் மூன்று மைல் நடை நமக்கு மிச்சம் !
சே பயங்கரம் ! எந்த நேரமும் சிங்கமோ புலியோ நம்மீது பாய்ந்து குதறிவிடக்கூடும்
கிளர்ச்சியூட்டும் அனுபவம் தான் !
அதோ .. எஸ்டேட் மாளிகை !
தூக்கு பாலத்தை இறக்குகிறார்கள்- வா.. ஒளிந்திருந்து அங்கே என்ன நடக்கிறது என்று பார்த்துவிட்டுப் போகலாம்.
மறுவினாடி — பாலத்தின் வழியே பல வண்ண ஆடையணிந்த ஓர் உருவம் தலைதெறிக்க ஓடிவந்தது!
விநோதமான காட்சிதான் !


அவன் ஒரு கோமாளி என்பதைத் தவிர வேறொன்றும் விளங்கவில்லை!
மிரண்டு போய் ஓடுகிறான்- யாரிடமிருந்து தப்பிக்கவோ? என்னதான் நடக்கிறது இங்கே?
அதோ — அவனுக்குப் பின்னால்!
தன் தலைக் கவசத்தை சரி செய்தவாறு ஒரு குதிரை வீரன் வெளிப்பட்டான்.
மறுகணம் பாய்ந்து ஓடும் கோமாளியை நோக்கி குதிரையை விரட்டினான்!
இது என்ன வகையான விளையாட்டோ?
ஏதோ படப்பிடிப்பு என்று நினைக்கிறேன்!
படப்பிடிப்பு என்றால் காமிராவை காணோமே!
வேறெங்கோ இருக்கும் ஒன்றுமட்டும் நிச்சயம் — இது உண்மை சம்பவமல்ல!



துரோகியே.. ஒழிந்துபோ!
ஹா ஆ ஆ...!
அப்போது பெட்ஸி அலறிய அலறல் அங்கே கோமாளியிட மிருந்து கிளம்பிய மரண ஓலத் தோடுகலந்து அமிழ்ந்துபோனது!
கத்தாதே அவர்கள் காதில் விழுந்தால் தொலைந்தோம்!
இரத்தம் தோய்ந்த ஈட்டியை கோமாளியின் உடம்பிலிருந்து உருவி எடுத்துக் கொண்டு மாளிகையை நோக்கி வெற்றிநடை போட்டான் அந்தக் குதிரை வீரன்.
ஹிப்பிகள் இருவரும் தாங்கள் கண்ட பயங்கர காட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.
பயங்கரம் கொடுமை!
நடக்கவே முடியாதுஎன்றால். அப்பப்பா அந்த ஈட்டி.. என்னமாய் பாய்ந்து மறுபக்கம் நீட்டிக் கொண்டு வந்தது!
அ.அழாதே பெட்ஸி! வா இங்கிருந்து ஓடிப் போய்விடலாம்
அதையே சொல்லிக் கொண்டி ருந்தால் எப்படி? இந்தசுற்றுச் சுவரை தாண்டி விட்டால் போதும் —ம் ஏறு


சுற்றுச் சுவரின் பின்னால்.. சாலையில்—
பல நூற்றாண்டுகளுக்கு முன் ஹீபர்ட் செயிண்ட் மௌர் நிர்மாணித்த பெரிய எஸ்டேட்டை நாம் கடந்து கொண்டிருக்கிறோம் மாடஸ்டி!
மறுகணம்— கிரீச் சென்று பிரேக் பிடித்து நின்றது கார்.
ஆவ்— பெட்ஸி !
அசையாதே! காயம் பட்டிருக்கிறதா என்று பார்க்கிறேன்.
கண்ணை மூடிக்கொண்டு குறுக்கே ஓடிவந்து விட்டாள்
நீ... நீதான் — நா .. நான் கீழே.... விழுந்து... கையிலே ..
கையில் ஈட்டியோடு குதிரையில் வந்தான் அவன்!
ஒரு விதூஷகனை விரட்டிக்கொண்டு போனான்!
படப்பிடிப்பு என்றுநினைத்தோம்.
நிஜமாகவே கொன்று விட்டான் !
இரண்டுமே அரைக் கிறுக்குகளோ — சரியான ஜோடிதான்!
முதலில் காயத்திற்கு மருந்திடுவோம் – கதை அப்புறம்!
பெட்ஸி சாலையோர விடுதியில் நேற்றிரவு நம்முடன் தங்கியிருந்த தோழர்கள் நம் காப்பியில் போதை மருந்தை கலந்திருப் பார்களோ?


கோமாளி... குதிரை வீரன் எல்லாமே பிரமை தான்!
ஆ...ஆமாம் அப்படித்தான் இருக்கும்!
என்னதான் போதையில் ஏற்பட்ட மனப்பிரமை என்றாலும் இருவருக்கும் ஒரே கற்பனையா தோன்றும்?
கொஞ்சம் பொறு!
வில்லிகார்வின் கோட்டையினை நோக்கி சென்றான்...
ஆவ்! மனித பிணம் விருந்தாகிக்கொண்டிருக்கிறது!
கண்ணில்பட்ட காட்சி இரத்தத்தை உறையவைத்தது.
இறந்து கிடக்கும் மனிதன் விதூஷகன் வேடத்திலிருக்கிறான்! அப்படியானால் ஹிப்பிகள் ரீல் விடவில்லை!
சாலையில் —
குதிரைவீரனைப் பற்றி இப்போது சொல்...
இல்லை அது நிஜமல்ல — பிரமை! நாங்கள் எதையுமே பார்க்கவில்லை.
கானகப் பகுதியிலிருந்து திறந்தவெளிக்கு வந்தான் கார்வின்.
ஒருவழியாக ஆபத்தான பகுதியை கடந்தாகி விட்டது!


அட... இங்கே என்ன நடக்கிறது? யாரையோ தேடுகிறார்களோ ?
அடேய் கார்வின், மறைந்து கொண்டுவிடு ! ... அவர்கள் கண்ணில் பட்டாயோ .. தொலைந்தாய் !
உன் நண்பனை எங்கே காணோம் ?
எஸ்டேட்டினுள் போயிருக்கிறார்.
உள்ளே கொடிய விலங்குகள் சுதந்திரமாகத் திரிகின்றன — அவனுக்கென்ன பைத்தியமா ?
நான் அப்படி நினைக்கவில்லை.
உள்ளே —
வியூகம் வகுத்து முன்னேறுகிறார்கள்
இப்படிக் குரல்-வளையை அழுத்திக் கொண்டுவிட்டால் சப்தம் வெளியே வராது.


மறுநிமிடம் - உருமாறிய கார்வினும் அவர்களோடு சேர்ந்துகொண்டான்.
ஊஹூம் !
ஏதாவது தெரிந்ததா ?
கோமாளியைக் கொன்றபோது கூடவே ஒரு பெண்ணின் அலறலும் கேட்டதாம் ... கோமாளி போட்ட ஓலம்தான் அப்படி எதிரொலித்-திருக்கவேண்டும் இங்கே யாரையும் காணோமே.
யா ......
ஆக — அனைத்தும் .. பிரமையல்ல — நிஜம்தான் !
மெள்ள நழுவி, வேடத்தைக் களைந்தெறிந்துவிட்டு சுற்றுச் சுவரேறி வெளியே குதித்தான் கார்வின்.
உள்ளே ஒன்றும் வித்தியாசமானதாக தென்படவில்லை
நான் சொன்னேன் அல்லவா — எல்லாம் வெறும் மனப்பிரமைதான் என்று.
சரி வண்டியிலேறிக் கொள்ளுங்கள் அடுத்த நகரில் உங்களை விட்டுவிட்டு செல்கிறோம்.
ஹிப்பிகளை இறக்கிவிட்ட பின் —
அங்கே உள்ளே என்ன பார்த்தாய் என்ற உண்மையை இப்போது சொல்லு வில்லி !



இறந்துகிடந்த ஒரு விதூஷக வேடதாரியை சிங்கங்கள் தின்று-கொண்டிருந்தன. ஆயுதம் தாங்கிய நபர்கள் புதருக்குள் யாரையோ தேடிக்கொண்டிருந்தனர்.
நீயும் கனவு காணத் தொடங்கி விட்டாயா?
கனவில் பார்த்த பொருளை கையோடு கொண்டுவர முடியுமா ? இதை புதருக்குள்ளிருந்து கண்டெடுத்தேன் !
தடியோடு கூடிய வேடிக்கை பொம்மை — விதூஷகர்களின் வசம் இருக்கக்கூடியது !
நீண்ட கார் பயணத்திற்குப்பின் கார்வினுக்குச் சொந்தமான ஹோட்டலில் —
வேறு முக்கியமான வேலை இருக்கிறதா ?
இல்லை — ஏன் கேட்கிறாய் ?
இதைப்பற்றி நாம் கொஞ்சம் ஆராய்ச்சி செய்யலாமே என்றுதான் —
ஓ - தாராளமாக !
எங்கே தொடங்குவது என்பதில்தான் குழப்பம்
செயிண்ட் மௌர் மாளிகையிலிருந்து ஒரு விதூஷகன். அவனை குதிரை வீரனொருவன் விரட்டிச்சென்று ஈட்டியால் குத்திக்கொல்கிறான்.. எல்லாமே பண்டைகாலத்தோடு தொடர்புடைய சமாசாரமாகவல்லவா இருக்கிறது.


நான் ஒத்துக்கொள்ளமாட்டேன் ! அந்தக் கோமாளி ஒரு நவீன ஆசாமி !
எப்படி ?
பொம்மை இணைக்கப்பட்டுள்ள சிறு தடியினுள் நுண்ணிய டேப் ரிகார்டர் கருவி இருக்கிறது பார்... இப்படி ஒரு கருவியை டாரண்டின் ஆபீஸில் பார்த்திருக்கிறேன்
டாரண்ட் ?
டேப்பை போட்டு கேட்டுப்பார்ப்போமா ?
விசேட இணைப்புக்கருவி தேவைப்படும்
சரி போகட்டும் .. கோமாளி ஆசாமி டாரண்டின் ஆளாக இருக்குமோ ?
அது நிஜமானால் இந்த டேப்பை போட்டு கேட்க தேவையான கருவி நிச்சயம் டாரண்ட் வசம் இருக்கும்... அவரை நாளை காலையில் சந்திப்போம்.
மறுநாள் — ஸர் ஜெரால்டு டாரண்டின் அலுவலகத்தில் விநோதமான அந்த சம்பவத்தை மாடஸ்டி விவரித்துக்கொண்டிருந்தாள்.
உங்கள் யூகம் சரிதான் கோமாளி நபர் என் சகாக்களில் ஒருவன்.



பெயர் ரோஜர்... அவன் செத்துப் போனது மிக மிக துரதிர்ஷ்டமானது
அவன் அந்த வேடம் தரிக்கவேண்டிய அவசியம் ?
இந்த டேப் சரியான விளக்கம் கொடுக்கும் !
டாரண்ட் டேப்பை கருவியில் பொருத்தி சுழல விட்டார் !
க்யூ என் வேடம் வெளியாகிவிட்டது... அதிக அவகாசம் இல்லை.. இதுவே என்னுடைய முதலும் கடைசியுமான அறிக்கை.
அவன் ஒரு விநோதமான பேர்வழி. – அவனுடைய ஆட்கள் வெறித்தனமான விசுவாசத்தோடு பணியாற்றி வருகிறார்கள்.
அவன் குறிப்பிடுவது ஜான் வாண்டிலியர் செயிண்ட் மௌர் பிரபுவை
அவன் ஆயுதங்களை எடுத்துக்கொள்கிறான் என்னை விதூஷகனுக்குரிய ஆடைகளை அணிந்துகொள்ளச்செய்கிறார்கள்.. ஒரு சில கணங்கள் எனக்கு தனிமை கிடைக்கிறது ....
அவன் பண்டைக் கால வாழ்க்கைமுறை வேடிக்கை விளையாட்டு-மல்ல – இன்றைய வேட்டைக்கு நான்தான் இலக்கு என்று தோன்றுகிறது.


இதோ என்னை துரத்தி வருகிறான் .. என் முடிவு நெருங்கி விட்டது ..
அத்தோடு பேச்சு நின்று வெற்று டேப் ஓடும் சப்தம் மட்டுமே கேட்டது.
இந்த டேப்பை கையோடு எடுத்துச் செல்கிறேன் அது ஒருவேளை உங்கள் வசம் கிடைக்கலாம் என்ற நம்பிக்கையில்.
ரோஜர் தைரியசாலி
சம்பவத்தின் பின்னணியை அறிந்து- கொள்ள விரும்புகிறோம். மாலையில் என் வீட்டிற்கு வாருங்களேன்.
மாலையில் — மாடஸ்டியின் வீட்டில்
செயிண்ட் மௌர் எஸ்டேட்டிலிருந்து மூன்று மைல் தள்ளி ஒரு ஆய்வுக்கூடம் ஏற்படுத்தியுள்ளோம்.
அங்கே தானியங்கி நீர்மூழ்கி ஒன்றினால் இயக்கம் பெறக்- கூடிய புதுவகை நீரடி வெடிகுண்டு ஒன்றினை உருவாக்கிப் பரீட்சித்து வந்தோம்
அதன் எடை இரண்டு டன் — நீளம் 25 அடி. இரண்டு வாரங்களுக்குமுன் அது திருடுபோய்விட்டது !
ஓ !
ஊஹூம் அப்படியில்லை —
இரகசிய ஆய்வுக்கூடத்தினுள் பலத்த பாதுகாப்பை ஊடுருவிப் புகுந்து அதை கடத்திக்கொண்டு போய்- விட்டார்களா என்ன ?


சுமார் ஒரு டஜன் பேர் வந்திருக்கிறார்கள். பயிற்சி பெற்ற கொரில்லாக்களைப்போல் நுட்பமாக தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள்... துப்பாக்கியால் ஒருமுறைகூட அவர்கள் சுடவில்லை.
ஆய்வுக்கூடத்திற்கு பாதுகாப்பு ஏற்பாடு காணாதோ ?
சாதாரண சூழ்நிலைக்கு அது போதுமானதுதான் ஆனால் இப்படியொரு தாக்குதலை யாருமே எதிர்பார்க்க வில்லை.
குறைந்த பலப்பிரயோகமே செய்த எதிரிகள் தப்பியோடி தகவல் கொடுக்க முயன்ற பாதுகாப்பு படை ஆசாமியை கொலைசெய்யத் தயங்கவில்லை.
செய்தித்தாளில் ஏதும் வரவில்லையே !
டாரண்ட் தொடர்ந்தார் ..
பெரிய டிரக் ஒன்றையும் திருடி அதன்மீது வெடிகுண்டை ஏற்றி சுவரை இடித்துத் தகர்த்து வெளியேறி-யிருக்கிறார்கள்.


அந்த டிரக் சில மைல் தொலைவில் அநாதையாகக் கிடப்பது பின்னர் தெரிய வந்தது. ஆனால் அந்த நீரடி வெடிகுண்டை காணவில்லை. எப்படி அதை தூக்கிக் கொண்டு சென்றிருப்பார்கள் என்பது தான் புரியாத புதிர் !
செயிண்ட் மௌர் பிரபுவை சந்தேகிக்கிறீர்களா ?
யூகம் சரியானது தான் என்று நிருபிக்கின்றன நேற்று நடந்த சம்பவங்கள் !
கொரியாவில் கொரில்லா படைப் பிரிவுக்கு தலைமை தாங்கி ரிடையரான ஒரு கர்னல் இந்த செயிண்ட் மௌர் பிரபு. தான்தோன்றித் தனத்துக்கும் அசட்டுத துணிச்சலுக்கும் பெயர் போன கர்னல் அதிகாரத்தை வெறுத்தார் அவருக்குக் கீழ் இருந்த வீரர்கள் அவரை துதிபாடினார்கள்.
சைப்ரஸில் நடந்த ஒரு விரும்பத்தகாத நிகழ்ச்சி காரணமாக படையிலிருந்து விலக்கப்பட்டார் பின்னர் மூன்று ஆண்டுகள் கழித்து, இந்த எஸ்டேட் அவருடைய வசம் வந்ததும், இங்கே வந்து குடியேறி விட்டார்.
ஜான் வாண்டிலியர் செயிண்ட் மௌர் – ஒன்பதாவது பிரபு ஒரு விநோதமான பேர்வழி பொதுவாக அவர் எஸ்டேட்டுக்குள் யாரையுமே வரவழைப்பதில்லை.


ஆனால் எப்போதாவது ஓரிரு விசேட விருந்தினர்களை கணிசமான தொகை பெற்றுக் கொண்டு உபசரித்து வருகிறார். ஏதாவது புதுமையை விரும்பும் சோம்பேறி பணக்காரர்கள் சிலர் இங்கே வந்து ஒருசில தினங்கள் தங்கி அனுபவித்துவிட்டுச் செல்கின்றனர்.
அம்மாதிரி வேளைகளில் மாளிகையில் உணவு, ஆடை, பழக்கவழக்கங்கள் அனைத்துமே பண்டைக்காலத்தை சேர்ந்தவைகளாகவே ஏற்பாடு செய்யப்படும்.
ரோஜரை அப்படியொரு விசேட விருந்தினராக உள்ளே அனுப்பி வைத்தோம் உளவறிந்து வர.
அவனுடைய உள்நோக்கத்தை தெரிந்து கொண்டு விட்ட மௌர் பிரபு அவரை கொன்றுவிட்டார்
நானும் கார்வினும் விருந்தினர்களாக அங்கே சென்று சில தினங்கள் தங்கி-வருவதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்
நானே கேட்க நினைத்திருந்தேன்--
கோமாளி கொல்லப்பட்ட பத்து தினங்களுக்குப்பின் மாடஸ்டியும் கார்வினும் மௌர் மாளிகைக்கு சென்றார்கள்.
ஓ...!மிஸ் மாடஸ்டி..! மிஸ்டர் கார்வின் — வருக! . வருக!


புதுமையான அனுபவம் உங்களுக்கு உவகை-யூட்டும் இரண்டே மணி நேரத்தில் 500 ஆண்டு-களுக்கு முந்தைய சூழலுக்கு உங்களை இட்டுச் செல்ல ஏற்பாடு நடந்துகொண்டிருக்கிறது.
மிக மிக செலவுபிடிக்கும் அற்புத நிகழ்ச்சி ! பாங்க் டிராப்டை கையோடு —
கொண்டு வந்திருக்கிறோம் !
செயிண்ட் மௌர் பிரபு அவர்களே, நீண்ட நாளாகவே இங்கே வரவேண்டுமென்ற ஆசை தங்களுக்கு.
பிரபு பட்டமெல்லாம் வேண்டாம்... ஜானி என்று அழைத்தாலே போதும் !
ஹே பசங்களா... சற்று நேரத்தில் இங்கே எல்லாமே பண்டைக்கால முறைக்கேற்ப மாறிப்போய்விடும் நீங்களும் அந்த சூழ்நிலைக்கு முரண்படாது இருக்கவேண்டும் !
இடத்தை காலி செய்யுங்கள் — ஹாஹ் ஹா !
மாடஸ்டியை பார்த்ததுமே ஆசாமி பணால் ! கவனித்தாயோ ?
உங்களுக்கு தனித்தனி அறை-வேண்டுமா — அல்லது ஒரே அறையா ?
தனித்தனி அறைகள் ! நாங்களிருவரும் நல்ல நண்பர்கள் அவ்வளவுதான் !


நல்லது அப்படியே ஏற்பாடு செய்துவிடுகிறேன் — ஓ என்ன அழகு என்ன அழகு !
வில்லி . உன் தோழி படு அட்டகாசம் !
மாடஸ்டி கேட்டால் மிக்க மகிழ்ச்சி யடைவாள்.
மாடஸ்டியின் படுக்கையறையில் —
குளியல் தொட்டிகூட பழைய பாணிக்கு மாறிவிடுமோ ?
இல்லை மேடம் . பிரபு இன்னும் அந்த அளவுக்கு சொல்லவில்லை !
நீ எப்போதும் இங்கேதான் வசிக்கிறாயா ?
இல்லை — உங்களைப்- போல் விருந்தினர்கள் வரும்போது மட்டும்தான் இங்கே வருவேன்.
பெண் விருந்தினர்களுக்கு பழைய பாணியில் ஆடை- யலங்காரம் செய்துவிடும் பணிப்பெண்ணாக இருப்பேன்.
மாடஸ்டி தன் அறையிலிருந்து வெளிக்- கிளம்பியபோது —
வில்லி !



மிக எடுப்பாகத் தோற்றமளிக்கிறீர்கள் பிரபு !
மேன்மைதகு சீமாட்டி பிளேஸி அவர்களே! தங்கள் அலங்காரமும் பெருமை சேர்ப்பதாகத்தானிருக்கிறது !
பிரமாதம் சூழ்நிலையை சரியாக புரிந்து-கொண்டுவிட்டீர்கள் !
விருந்து மண்டபம் 500 ஆண்டுகளுக்கு முந்தைய சூழலை படம் பிடித்துக்காட்டியது.
அமைதி. அமைதி ! அழகுச் சீமாட்டி பிளேஸியின் சார்பிலும் அவரது மெய்க்காப்பாளர் ஆணழகர் வில்லியின் சார்பிலும் உங்கள் அனைவருக்கும் இப்போது விருந்தளிக்கப்போகிறேன்.
விருந்தின்போது —
விருந்தில் பங்கேற்றவர்களை எல்லாம் எப்படி ஏற்பாடு செய்தீர்கள் ஜானி ?
பெண்கள் அனைவரும் உள்ளூர்வாசிகள் ஆண்கள் – படையில் என்கீழ் பணிபுரிந்த கமாண்டோக்கள். வேறு யாருக்கு கீழேயும் பணிபுரிய இடமில்லாமல் என்னுடனேயே வந்துவிட்டவர்கள்.
ஹே நாட்டியமாட இன்னிசை எழுப்புங்கள்



போ...போய் சில பெண்களுடன் ஓட்டிப் பழகி உனக்கு பிடித்தமானவைகளை தேர்ந்தெடுத்துக்கொள் வில்லி... இங்கே எதுவுமே தப்பில்லை...
உங்களோடு, நாட்டியமாடும் பெருமை எனக்கு அம்மணி !
நாட்டிய நிகழ்ச்சிக்குப்பின் 'ஒற்றைக்கு ஒற்றை' சண்டை நிகழ்ச்சி துவங்கியது
ம்... தயங்காதே ... வா ...
அதைத் தொடர்ந்து ஒரு பாய்ச்சல்
ஹா ... தொலைந்தாய் நீ — இத்தோடு !
அழுத்தாதீர்கள் — வேடிக்கை வினையாகிவிடப்போகிறது.
வில்லி நாம் பலப்பரீட்சை செய்து பார்க்கலாமா ?
நன்றி வேண்டாம்! எனக்கு கத்தி என்றாலே பயம் ..
ஜானி இன்று ரொம்ப உல்லாசமாக இருக்கிறார்
என்னோடு அம்பு எய்யும் போட்டிக்கு வருவது யார்? — பந்தயம் ஒரு பை நிறைய தங்கம்!


சவாலை நீங்கள் யாரும்-ஏற்பதாக தெரியவில்லை ?
ஏன் நீதான் முயன்று பார்க்கலாமே !
தெரியாத விஷயத்தில் நான் காலை விடுவதில்லை.
புத்திசாலிக்கு அதுதான் அழகு !
நீங்கள் செய்தபோது சுலபமான வேலை-யாக தோன்றியது
சுலபமானதுதான்-கற்றுக்கொண்டு-விட்டால்...! நான் உனக்கு சொல்லித் தருகிறேன் சீமாட்டியே !
இப்படி அம்பை வைத்து நாணை மெள்ள பின்னுக்கு இழுத்து —
ம் விடு இப்போது !
உய் ...
ஹாஹ் ஹா ! பரவாயில்லை... மறுபடியும் முயற்சிக்கலாம்... !
வேடிக்கை நிகழ்ச்சிகள் முடிந்தபின் —
பொழுது இனிமையாக கழிந்தது — மிக்க நன்றி ஜானி...! குட்நைட் !
ஒரு பரிசுதர எண்ணியுள்ளேன் —


ஊஹூம்... வேண்டாம் சிறிது நேரமே பழகிய ஆண் மகனிடம் மனதை பறி-கொடுப்பது உயர்குல சீமாட்டிக்கு பெருமை சேர்க்காது.
அஹ் !
அத்தனை சுலபத்தில் என் மனதை வென்றுவிட முடியாது...
ஆமாம்... சவாலாக அமையும் சங்கதிகளை வெற்றிகொள்வதில்தான் த்ரில் இருக்கும் !
நாளைக்கு என்னென்ன புதுமைகள் எங்களுக்கு காத்திருக்-கின்றன?
வேட்டைக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்
எனக்கு குதிரை சவாரி அவ்வளவாக வராது...
அவசியமில்லை... கையில் ஈட்டி-யோடு கால்நடையாகச் சென்று சிங்கங்களை வலைவீசி பிடித்து வரப்போகிறோமாக்கும் !
அருமையான ஏற்பாடு... நினைக்கும் போதே மயிர்க்கூச்செறிகிறது !
நன்றி சீமாட்டியே... குட் நைட் !
எல்லோரும் தூங்கப் போன பின் யாரோ தன்னை மெள்ளத் தொடுவதாக உணர்ந்தாள் மாடஸ்டி !
வில்லியா ?



கதவை தட்டி நேரே உள்ளே வந்திருக்க லாமே !
காரண-மாகத்தான் !
ஜானிக்கு உன்மீது ஒரு கண் — இன்னமும் உன்னோடு ஒட்டிக் கொண்டிருப்பானோ என்றொரு சந்தேகம் ..
இடம் கொடுத்திருந்தால் நிச்சயம் ஒட்டிக் கொண்டு விட்டிருப்பான். சாமர்த்தியமாக விரட்டியடித்துவிட்டேன்!
கார்வின் உள்ளே வந்து அமர்ந்தான்.
இந்த ஏற்பாடுகளைப் பற்றி உன் கருத்து?
வேடிக்கை விளையாட்டில் ஓரளவு நிஜமும் ஊடுருவியிருக்கிறது.
கத்தி விளையாட்டில் ஜானி 'எதிரி'யை நிஜமாகவே கொன்றிருந்தாலும் 'பாவம் சார்லி ' என்று மற்றவர்கள் மிக சுலபமாக அதை ஜீரணித்துக் கொண்டு விட்டிருப்பார்கள்.
விளையாட்டு என்பதை மறந்து சூழ்நிலையில் தங்களை இழந்து போய்விடுகிறார்கள்.
ஆபத்தோடு விளையாடிப் பழக்கப்பட்டவர் களுக்கு இப்படியொரு துடிப்பான வடிகால் அவசியப் படுகிறது ...
உண்மைதான் !


டாரண்டின் நீரடி வெடிகுண்டை இவர்கள் திருட வேண்டிய அவசியம் ?
இன்னமும் விளங்காத புதிர் அது !
ஒருவேளை திருடர்களைப் பற்றிய டாரண்டின் யூகம் தவறோ ?
அப்படியிராது .. திருடர்கள் பழங்கால கமாண்டோ முறையை பின்பற்றி யிருக்கிறார்கள்.
ஆராய்ச்சியை தொடங்குமுன் மாளிகையின் அமைப்பை பூரணமாக புரிந்து கொள்வது அவசியம்.
டிரக் அழுத்தமான தடத்தை ஏற்படுத்தாமல் செல்லாது...
இரண்டு டன் எடையுள்ள வெடிகுண்டை சுமந்து செல்லும்
மிச்சத்தை காலையில் பேசிக்கொள்ளலாம்.. யாராவது வந்துவிடப்-போகிறார்கள்
ஆல்ரைட்.. காலையில் சந்திப்போம் —
குட்நைட் !



மறுநாள்--
பசங்களுக்கு இந்த வேடிக்கை ரொம்ப பிடிக்கும்.
எனக்கு ரசிக்கவில்லை !




இந்த மாளிகையை எனக்கு சுற்றிக் காட்டுங்களேன்!
ரொம்ப காட்டுமிராண்டித் தனமாக இருக்கிறதா-- என்ன செய்ய..? பண்டைக்கால வாழ்க்கைமுறையில் இது ஒரு அங்கமாக இருந்து-வந்திருக்கிறது.




இந்த வழி எங்கே இட்டுச் செல்கிறது ?
பழைய சரங்கப்பாதை-- பார்த்து இரசிக்க உள்ளே ஒன்றுமில்லை.




அழகான கண்கள்--சின்னஞ்சிறு இதழ்கள்...கவர்ச்சியூட்டும் உருவம்... அப்படியே கடித்துத் தின்றுவிட-மாட்டோமா என்றிருக்கிறது !
திடீரென்று ஏனிந்த புகழ்மாலை ?




உயர்குல சீமாட்டியை வழிக்கு கொண்டுவரத்தான்--
நல்லது — நாம் மேலே நடப்போமா !



ஏற்கனவே ஒருமுறைப் பிடித்-திருக்கிறோம் இதை...அதனால்தான் எச்சரிக்கையாக நடந்துகொள்கிறது
மறுநாள் காலை சிங்க வேட்டை ஆரம்ப-மானது.
வயதான சிங்கம்... ஆனாலும் ஆபத்தான காரியம்!
சுற்று வேலிக்கு மறுபுறம் இருந்து அந்த ஆபத்தான பொழுதுபோக்கை கண்டு ரசித்தனர் கார்வினும் மாடஸ்டியும்!
தேவையில்லாத ஆபத்தை விலைகொடுத்து வாங்குவதில் விவேகமிருப்பதாக படவில்லை..
வலையை வீசு!
தப்பியோடுகிறது... மடக்கு--விடாதே!
ஆவேசமான கத்தலும் ஈட்டியின் அச்சுறுத்தலும் சிங்கத்தை மடக்கித் திருப்பிவிட்டன.


கயிற்றை இழுங்கள் !
வெற்றி..வெற்றி--சரி..இனி தூக்க மருந்தை ஊசிமூலம் ஏற்றியபின் அதை சுதந்திரமாக விட்டுவிடுங்கள்
மற்ற விலங்குகளை இனி அவிழ்த்து விடலாம் என்று டிக்கியிடம் போய்ச்சொல் !
இந்தப் பசங்க-ளோடு நேரடி மோதலுக்கு அவசியம் ஏற்படும்-பொழுது இந்த அபாயத்தையும் சந்திக்க வேண்டிவரும் மாடஸ்டி !
அந்த துரதிர்ஷ்டநிலை ஏற்படாது நமக்கு !
பிற்பகலில் இன்னொரு போட்டி ஏற்பாடாகியிருந்தது
கழியை அழுத்தமாக வைத்துவிட்டேனா— வலிக்கிறதா ?
கழுத்தே முறிந்துவிட்டது போலிருக்கிறது !



இனி என்னுடைய முறை
கொஞ்சம் பொறு... அந்த சீமாட்டியிடம் பேசிவிட்டு வந்துவிடுகிறேன்.
இன்றிரவு மாளிகையை அலசிப்பார்த்துவிட வேண்டும்--குறிப்பாக அந்த நிலத்தடிப் பாதையை.
விடிகாலை 3 மணிக்கு சந்திக்கிறேன்!
டாரண்ட்டோடு ரேடியோவில் தொடர்பு கொண்டாயோ?
இல்லை... சொல்லும்படியாக செய்தி ஏதுமில்லையே — அதோ ஜானி வருகிறார்...சிரிக்க முயற்சிசெய்.
போட்டியில் வெற்றி பெற உன் வாழ்த்துக்களைக்கோரி வந்திருக்கிறேன் சீமாட்டியே!


அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்க வாழ்த்துகிறேன் பிரபு அவர்களே!
மனப்பூர்வமாக வாழ்த்தியதாகத் தெரியவில்லையே!
உண்மைதான்..போட்டியில் ஜானி ஒரு கையை-காலை உடைத்துக்-கொண்டால் என்னை இன்றிரவு தொந்தரவு செய்ய வரமாட்டானல்லவா?
போட்டியில் வெற்றி செயிண்ட் மௌர் பிரபுவுக்குத்தான்!
நீ எதிர்பார்த்தது நடக்கவில்லை.
அவரைத் தவிர்ப்பது எப்படி என்று இப்போதே திட்டமிடத் தொடங்கிவிட்டது மனம்!
இத்தனை சாகஸங்களும் உன் மனதை வெல்வதற்காகத்தான் செய்கிறான்.
அதுதான் கஷ்டம்!
அன்றிரவு எல்லோரும் படுக்கைக்கு செல்லும் வேளையில்
ஓ...ஜானி — வாருங்கள்... என்ன விசேஷம் இந்த அகால வேளையில்?


ஒன்றும் புரியாததுபோல் பாசாங்கு செய்யாதே என் அழகு தேவதையே... இம்முறையும் என்னை நீ புறக்கணித்தால் தாங்காது— என் இதயம் வெடித்துவிடும்.
சும்மா உங்களை ஆழம் பார்க்கத்தான் அப்படிப் பேசினேன்... வாருங்கள் அன்பே...!
செயிண்ட மௌர் பிரபு ஆழ்ந்த நித்திரையி-லாழ்ந்தபின்
மாளிகையை ஆராயக் கிளம்பினாள் மாடஸ்டி
3 மணிக்கு வருவதாக வில்லியிடம் சொல்லியிருந்தேன். தாமதமாகிவிட்டது...
இரண்டு நிமிட இடைவெளிக்குப் பின்
எங்கே வராமலே இருந்துவிடுவாயோ என்று எண்ணத் தொடங்கிவிட்டேன்
செயிண்ட் மௌரை சமாளித்துவிட்டு வரவேண்டியதாயிற்று... அதனால்தான் தாமதம்
அவருக்கு நம்மீது சந்தேகம் ஏற்பட்டிருக்கிறதா என்ன ?


என்மீது ! கடைசியில் அவருக்கு ஊற்றிக் கொடுத்த ஒயினில் தூக்கமாத்திரையை போட்டு தூங்கப்-பண்ணிவிட்டேன்.
சரி...நாம் ஆராய்ச்சியை எங்கே துவக்கலாம்.
நிலவறையில்--அதைத்தான் அவர் சுற்றிக்காட்டாமல் தவிர்க்க முயன்றார்.
ஓசையின்றி நடந்தார்கள் இருவரும்
இந்த பாதை நிலவறைக்கு செல்வதாக குறிப்பிட்ட அவர் உள்ளே பார்த்து ரசிக்க ஏதுமில்லை என்றார்.
பூட்டியிருக்கிறது... கொத்துச்சாவியில் ஏதாவது சேருகிறதா பார் !
கதவு திறந்து-கொண்டபின் நிலவறை வழியே முன்னேறிச் சென்றனர்.
இங்கே ஒன்று-மில்லை...திரும்பிச் சென்று பிறபகுதிகளை ஆராய்ந்து பார்க்க-லாம் வா


இன்னெரு பகுதியும் காலியாகவே கிடந்தது.
இல்லாத ஒன்றை தேடுகிறேமோ ?
கோமாளியை ஜானி கொன்றிருக்கிஞர்...!
எதையோ மறைக்கத்தான் அந்தக் கொலை நடந்திருக்கவேண்டும் !
ஒரு படிக்கட்டு இங்கிருந்து கீழ்நோக்கிச் செலகிறது பார் !
இதற்கு கீழேயும் ஒருதளம் இருக்கக்-கூடும்...
படிக்கட்டின் முடிவில் நடை வராந்தா போன்றதொரு பகுதிவந்தது
ஜாக்பாட் அடித்து-விட்டோம் வில்லி!
வவ் !
நாம் வந்த வழியாக கொண்டுவந்திருக்க முடியாது..வேருெரு வழி நிச்சயம் இருந்தாகவேண்டும்.
டாரண்டின் நீரடி வெடிகுண்டு-தான் அது !
அதை எப்படி இங்கே கொண்டு-வந்து சேர்த்-திருப்பார்கள்?
யாராலும் சுலபத்தில் கண்டுபிடிக்க முடியாத மறைவிடத்தில்தான் ஒளித்துவைத்-திருக்கிஞர் ஜானி !
33


ஒருவகை ரயில்வே டிராலியின்மேல் இருக்கிறது.
சுரங்கங்களில் பயன்படும் தண்டவாள அமைப்பு அல்லவா இது ?
ரயில்பாதை எங்கேவரை செல்கிறது என்று பார்க்கவேண்டுமா ?
அவசியமில்லை...வெடிகுண்டின் இருப்பிடம் தெரிந்துவிட்டது... இனி மிச்சத்தை டாரண்டின் பொறுப்பில் விட்டுவிடுவோம்.
இவர்களுக்கு இது எவ்வகையில் பயன்படுமோ தெரியவில்லை !
சும்மா ஒரு 'த்ரில்' என்பதற்காகவும் திருடிக்கொண்டு வந்திருக்கலாம்.
அவள் சொல்வதுபோல் சும்மா ஒரு 'த்ரில்' இருக்கிறது என்பதற்காகத்தான் அதை திருடி எடுத்துவந்தோம் வில்லி...
சட்டென்று எங்கும் வெளிச்சம் பரவியது...
ஆறு துப்பாக்கி முனைகள் உங்களை குறிவைத்துக் கொண்டிருக்கின்றன என்பதை தெரிந்து-கொண்டு கைகளை உயரே தூக்கி விலகி நில்லுங்கள் !



நீ ஊற்றிக்கொடுத்த ஒயினை நான் பருகவேயில்லை--இப்படி ஒரு செயலை உன்னிடமிருந்து எக்கணமும் எதிர்பார்த்திருந்தேன்.
மாடஸ்டி பிளைஸியும் வில்லி கார்வினும விருந்தினர்களாக இங்கே வருகிறார்கள் என்றால் சும்மா உண்டு உறங்கி விட்டுப்போக அல்ல என்று யூகிப்பதில் கஷ்டம் ஏதுமில்லை!
ஆனாலும் உங்கள் வரவை நான் ரொம்பவும் இரசித்தேன.. அதிலும் இனி நடக்கவிருக்கும் விளையாட்டுக்களிலும் நிறைய சுவாரஸ்யம் இருக்கும்!
மாடஸ்டியும் கார்வினும் கைவிலங்கிடப்-பட்டனர்.
மாடத்திலுள்ள அறைகளில் இவர்களை தனித்தனியே போட்டு அடைத்துவையுங்கள்...
எங்களையும் அந்த விதூஷகனைப்-போல குதிரை மீதேறித் துரத்தி வந்து ஈட்டியால் குத்தி கொல்லப் போகிறீர்களா?


விதூஷகனுக்கு அதுபோதும்..உங்களுக்கு அதைவிட சிறப்பான வழியனுப்பு விழா ஏற்பாடு செய்ய எண்ணியுள்ளேன்.
அதை எப்படி இங்கே கொண்டுவந்தேன் என்றறிய ஆவலாக இருக்கிறதல்லவா? — வெகு சுலபம்...
இந்த குகைப்பாதை பழைய சுரங்கம் ஒன்றோடு சேர்ந்து மலைப் பகுதியின் மறுபக்கம் வெளி வருகிறது. வெளி நுழைவாயிலில் செடி கொடி புதராக மண்டிக் கிடப்பதால் பார்வையிலிருந்து தப்பி விடுகிறது இந்த இரகசிய பாதை.
கேட்க நன்றாகத்-தானிக்கிறது . .
— இந்த உண்மையை மட்டும் டாரண்டின் காதுக்கு எட்டச் செய்து விட்டால் . . !
வில்லி தனியறையில் அடைக்கப்பட்டான். மாடஸ்டியும் அப்படியே !
காலைச் சிற்றுண்டி முடிந்ததும் விசாரணை ஆரம்பமாகும்
வெடிகுண்டை கடத்தி வந்த உங்கள் நோக்கம்தான் எனக்கு விளங்கவில்லை . . ரஷ்யா அல்லது வேறு ஒரு அயல் நாட்டிற்கு அதை தள்ளி விடுவது என்ற எண்ணமா ?


தேசத் துரோகி என்று என்னை குறிப்பிட்ட உன்னை - !
நன்றி கெட்ட இந்த நாட்டிற்காக நானும் என் சகாக்களும் போர் முனையில் இரத்தம் சிந்தியிருக்கிறோம் - நாங்களா தேசத்துக்கு துரோகம் நினைப்போம் ?
அப்படியில்லை என்றால் வேறு என்ன காரணம் ?
காரணம் ? - அதைப் பற்றி இன்னும் நான் தீவிரமாக சிந்திக்கவேயில்லை . .
பார்லிமெண்ட் கட்டிடத்திற்கு நாங்கள் அதை எடுத்துச் சென்று, நாட்டை சீர்கேடான இழிநிலைக்கு கொண்டு வந்த ஆட்சியாளர்களை தீர்த்துக் கட்டப் பயன்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை !
தூள்


மாடஸ்டி வசம் உள்ள சிறு ரேடியோ கருவி மட்டும் இவர்கள் பார்வையிலிருந்து தப்பிவிட்டால் டாரண்டுக்கு தகவல் அனுப்பி உதவி கோர வாய்ப்புண்டு . .
சுவரில் தொங்கும் வளையத்தில் இவளை பிணைத்து விட்டு சற்று விலகியே நின்று - காவல் நில் !
நாசமாய்ப் போக !
டாரண்ட் இங்கிருந்து பத்து மைல் தொலைவில் இருக்கிறார். மாடஸ்டியிடமிருந்து அவருக்கு செய்தி போனால் சுரங்கப் பாதை வழியே அரைமணி நேரத்தில் அவர் இங்கே வந்து சேரும் வாய்ப்புண்டு .
மாடஸ்டிக்கு தனிமை தேவைப்பட்டது- உடனே..
அவளை எப்படியாவது அருகில் வரவழைத்து- விடவேண்டும் !
பெரிய சிலந்தி ஒன்று என் சட்டைக்கு உள்ளே ஊர்ந்துகொண்டிருக்- கிறது..அதை வெளியே எடுக்க உதவிசெய்யேன் !
செய்ய ஆசைதான். ஆனால் விளைவு இருவருக்குமே சாதகமாக இராது !



விடிந்ததும் காலைச் சிற்றுண்டி வந்து சேர்ந்தது.
ஏதாவது தொல்லையா ?
என்னை வசியப்படுத்தி, அருகில் வர அழைத்தாள்.
நான் எச்சரிக்கையாக ஒதுங்கியே இருந்துவிட்டேன்.
புத்திசாலி நீ.. பெண்களை வெளியே அனுப்பியாகி-விட்டது.
கார்வினை சந்திக்க நேர்ந்தபோது மாடஸ்டி இரகசிய சமிக்ஞை செய்தாள்.
இன்னும் செய்தியனுப்ப-வில்லை என்கிறாளே— நிலைமை சரியில்லையே !
விசாரணையை தொடங்கலாம்-- கொண்டுவா இவளை !
உளவு பார்க்கும் நோக்கத்தோடு விருந்தினர்கள் என்ற வேடத்தில் உள்ளே நுழைந்ததாக உங்கள்மீது குற்றச்சாட்டு !
உங்கள் பதிலென்ன சீமாட்டி ?
இந்த கேலிக்கூத்தை உடனே நிறுத்தா-விடில் ஏற்கனவே சிக்கலில் மாட்டிக்-கொண்டிருக்கும் நீ மேலும் பல பிரச்னைகளுக்கு ஆளாக நேரிடும் என எச்சரிக்கிறேன் !


குற்றவாளிகள் குற்றச்சாட்டுக்கு மறுமொழி சொல்ல மறுப்பதால் வழக்குமன்றம் பண்டைக்கால வழக்கப்படி அடுத்த நடவடிக்கைக்கு உத்தரவிடுகிறது.
மாடஸ்டி பிளைஸி... உனக்கும் சேர்த்து கார்வின் பந்தயத்தில் அதிர்ஷ்டத்தை சோதித்துப் பார்க்கட்டுமா?
நானே நேரில் பந்தயத்தில் இறங்க விரும்புகிறேன் அதற்குரிய ஆயுதங்களை கொடுங்கள்.
நான் இறந்தால் உங்களிருவருக்கும் சுதந்திரம் கிடைக்கும்.. கார்வின் இறந்தால் நீ இறுதிவரை எனக்கு விசுவாசமாக நடந்துகொள்ளவேண்டும்.
பெண்களோடு நாங்கள் போட்டியிடுவதில்லை.. நானும் கார்வினும் குதிரையேறி சண்டையிடப் போகிறோம்!
அடேய் வில்லிப்பையா சரியான சோதனை வந்து சேர்ந்திருக்கிறதடா உனக்கு!
குதிரையேறி சண்டையிடுவதில் யாருமே கொல்லப்படாவிடில் கதாயுதம் ஏந்தி தரையில் நின்று போராடுவோம்!
இந்த யோசனையை நான் ஏற்றுக்கொள்ளாவிடில்.. ?


நீயும் மாடஸ்டியும் அந்த கோமாளியைப்-போல் விரட்டப்பட்டு குத்திக்கொல்லப்-படுவீர்கள்.
சண்டைக்கு வேண்டிய கருவிகளை கொண்டு-வாருங்களடா !
கார்வினுக்கு சம்மதிப்பதை தவிர வேறு வழி இருக்கவில்லை.
சரி சம பலம் இல்லாத இந்த மோதலில் ஏதாவது தந்திரம் செய்தாலன்றி வில்லி உயிர் பிழைக்க வழியில்லை.
இந்தக் குப்பையைத் தூக்கி அப்பால் எறியுங்கள் ! யாருக்கு வேண்டும் உங்கள் கவசம் ?
எல்லாது ?
கார்வின் மனதில் வேறொரு திட்டம் இருந்தது.
ஏதோ இரகசிய சமிக்ஞை செய்கிறான்...
உங்களை உதைக்க யாராலும் முடியாது என்று மனப்பால் குடிப்பதை நினைத்தால் சிரிப்புத்தான் வருகிறது !
ஏதாவது போக்குக் காட்டியாக வேண்டும்.
பைத்தியக்காரன் நீ
இங்கே யார்தான் பைத்தியம் இல்லை ?


பாவம் தோற்று மடியப் போகிறுய் !
கிண்டலா பண்ணுகிறுய் மூடனே !
ரகசிய முறையில் கார்வினிட- மிருந்து மாடஸ்டிக்கு எச்சரிக்கை சென்றது.
அவனுக்கு வேண்டாம் என்ருல் எனக்கும் கவசம் தேவை- யில்லை.
அதை மாட்டிக் கொள்வது நல்லது குழந்தை !
அவனை —
வேண்டாம்...அவனை முறைப்படி நான் தீர்த்துக் கட்டுகிறேன் !
உன் கடைசி பிரார்த்தனையை சொல்லிக்கொள் தம்பி !
போய் உன் தலைவரிடம் கூறு இந்த யோசனையை !
வாத்தியம் முழங்கியது:.. போட்டி தொடங்கியது — யாரை யார் முதலில் கொல்வது என்பது பந்தயம்.
இதுதான் தருணம்... இனி வேடிக்கையைப் பார் !


நில்லடா நாயே ! எங்கே போகிறாய் !
குதிரையை திசை திருப்பி ஓட்டினான் கார்வின்.
மாளிகையை நோக்கி குதிரையை விரட்டினான் கார்வின் !
தடுத்து நிறுத்துங்கள் அவனை !
கையிலிருந்த ஈட்டியை மாற்றிப் பிடித்தான்.
கோழைப் பயலே! நில் !
கரணம் தப்பினால் மரணம்தான் !
ஈட்டியை கீழே ஊன்றி அப்படியே ஒரு பாய்ச்சல்...
மாடஸ்டி மின்னலென செயல்-பட்டாள்...
ஊம்...!


கார்வின் மாடத்தை சென்றடைந்தான்.
இந்த திடீர் நிகழ்ச்சியால் ஒருகணம் செயலிழந்து போயினர் செயிண்ட்-மௌரும் அவரது சகாக்களும்.
மறுபடியும் அப்படியொரு சர்க்கஸ் வேலையை நீ செய்து நான் பார்ப்பதைத் தவிர்க்கும்படி இறைவனை வேண்டிக்கொள்கிறேன் !
ஓடி வா -- உள்ளே...
அவர்கள் தப்பியோடி வெளியேறிவிடாமல் மாளிகையைச்சுற்றி வியூகம் வகுத்து நில்லுங்கள் !
அருகில் கிடந்த கோடாரியால் மாடஸ்டியின் கைவிலங்கை உடைத்துத்-தகர்த்தான் கார்வின்.
விநாடி நேரம்கூட எனக்குத் தனிமை கிடைக்காததால் மினி-ரேடியோவை பயன்படுத்த வாய்ப்பில்லாமலே போயிற்று.
மாடஸ்டியின் காலணியினுள் ஒளிந்துகிடந்தது அந்த மினி-ரேடியோ !



ஓடினால்தான் உண்டு..! எந்தத் திசையில் ஓடலாம் சொல் ?
சுரங்கப்பாதை வழியே டாரண்ட் நுழையக்கூடும்.. எனவே இவர்களை திசை திருப்பிச் செல்ல வேண்டியது அவசியம்.
சுரங்கப் பாதையில் காவல் ஏற்பாடு செய்து-விட்டாயா ?
வியூகம் முறையாக அமைக்கப்பட்டு விட்டது ஜானி !
இரண்டு பேரை அனுப்பி-யிருக்கிறேன்...
இனி இவர்கள் தப்பியோடி வெளியேற முடியாது
ஆயுதங்களை எடுத்து விநியோகம் செய்யட்டுமா ?
கூடாது ! ஒரு சாதாரண இளைஞனையும், ஒரு பெண்ணையும் உரமேறிய நம் கைகளைக் கொண்டு சமாளிக்க முடியாவிட்டால் நாமெல்லாம் பின்னல் வேலை செய்யத்தான் லாயக்கு !
இதோ – நமக்குத் தேவையான எல்லா ஆயுதங்களும் இங்கே குவிந்து கிடக்கின்றன.
சிலவற்றை தூக்கவே சிரமப்படுவேன் என நினைக்கிறேன்.
நமக்கு என்ன சங்கேத அடையாளம் தரப்பட்டிருக்கிறது?
வேறொரு அறையில் கனமில்லாத நீண்ட வாள் ஒன்று இருக்கிறது . . அதை நான் எடுத்துவரும் வேளையில் டாரண்டோடு தொடர்பு கொள் !



எனக்கு பெடிகோட் - உனக்கு - கிங் - காங் !
எனக்கு வேறு நல்ல பெயர் கொடுத்திருக்கலாம் !
டாரண்டின் அலுவலக அறையில் . .
செய்தி வருகிறது ஸார் . . .
கேள் . . கேள் !
மலைச்சரிவின் மறுபக்கம் சுரங்க வாயில் ஒன்று! செடி கொடிகளால் மூடிக் கிடக்கிறது. அதன் வழி நுழைந்து வரவும்.
கிங் - காங்கின் அழைப்பு - வந்த பணி வெற்றி . . எங்கள் வேஷம் கலைந்துவிட்டது . . போக்கு காட்டிக் கொண்டிருக்கிறோம் . . போதிய பலத்தோடு விரைந்து வரவும்.
காப்டன் டால்டன்! இன்னும் ஐந்து நிமிடத்தில் காவல் படையினரோடு டிரக் நகரத் தயாராகட்டும் . . நான் இதோ வருகிறேன்.
அவர்கள் தப்பி வெளியேறி விடாதவாறு இரண்டு பேர் வாயிலை காவல் செய்யுங்கள் . . மற்றவர்கள் இருவர் இருவராக மாளிகையில் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று அவர்களை தேடுங்கள்.
அங்கே மாளிகையில் -


எனக்கு இந்த வாள் போதும் !
டாரண்ட் வந்து சேரும்வரை நேரத்தை கடத்த ஏதாவது யுக்தியை கையாண்டால் போதுமானது.
மாடஸ்டி, வில்லி.. உங்கள் இருவருக்கும் மரணதண்டனை விதித்திருக்கிறேன் அதை நிறைவேற்ற இதோ தயாராக வந்து-கொண்டிருக்கிறோம் !
கேட்டாயா வில்லி..!
கிடக்கிறான் விடு !
இருவர் இருவராகப் பிரிந்து ஜானியின் ஆட்கள் மாடஸ்டியையும் கார்வினையும் தேடலாயினர்...
யாரோ இந்த வழியே வருகிறார்கள்.
அந்தக் கதவு வழியாக வெளியேறிவிடலாம் வா — நேரத்தைக் கடத்தியாக வேண்டும் !
47


பூட்டியுள்ளது !
தொல்லைதான் !
அங்கே பார்— யாரென்று !
ஜானியை வரச்-சொல்லி குரல் கொடுக்கட்டுமா ?
குரல் எட்டமுடியாத தொலைவில் இருக்கிறார் ஜானி...மேலும் நிலைமையை நாமே சரியாகக் கையாளவேண்டுமென்று எதிர்பார்ப்பார் !
முதலில் காரியத்தை முடித்துவிட்டு பிறகுகுரல் கொடுக்கலாம்.
அந்த தீர்மானம் நமக்கு ஒருவகையில் நல்லது !
நீ அவளை கவனி !
போயும் போயும் ஒரு பெண்ணிடம் என் வீரத்தை காட்டச் சொல்கிறாயே !
அவன் கைவசமுள்ள கதாயும் மிக ஆபத்தானது.. அதிக எச்சரிக்கையோடு நடந்துகொள்
என்னுடைய வாள் மட்டும் ஆபத்தில்லாதது என்ற எண்ணமா ?



மற்றவர்களின் கவனத்தை ஈர்த்துவிடக்– கூடாது...கூடியவரை பலத்த ஓசை ஏற்பட்டுவிடாமல் பார்த்துக்கொள் வில்லி !
இரண்டும் பொருந்தியிருந்தால் பலத்த ஓசை ஏற்பட்டிருக்கும்.
எதிரியின் வீச்சுக்குப் பதிலடி கொடுக்காமல் விலகிக்– கொள்கிறான் கார்வின்.
கையிலுள்ள ஸ்டூல்தான் எனக்குப் பாதுகாப்பு வாய்ப்பு கிடைத்தால் கத்தியை அவனுடைய கழுத்தில் சொருகிவிடலாம் !
பொறு தம்பி !
தில் இருந்தால் நில்லடா கோழை !
கத்தியை வீசிக்கொண்டு எதிரி பாய்ந்தபோது கையிலிருந்த கோடாரியை வீசினான் கார்வின்.
அந்த முயற்சி எதிரியை நிலைகுலைந்து சரியவைத்தது.


ஊப்...!
ஸ்டூலோடு மாடஸ்டி சரிந்து எதிரியையும் தன்னோடு விழச் செய்தாள். அவளுடைய கத்தியின்முனை எதிரியின் தாடையிலிருந்தது !
சதக்!
கதாயுதத்தை எதிரி வீசியபோது மாடஸ்டி ஸ்டூலினால் அதை தடுத்தாள்..பலகையினுள் முட்கள் ஆழப்பதிந்து கொண்டுவிட்டது.
நகர்ந்தாயோ கத்தி பாய்ந்துவிடும் !
வில்லி... இப்படிக் கொஞ்சம் வருகிறாயா ?
இதோ...!
கத்திமுனையில் தவித்த எதிரிக்கு கார்வின் ஒரு குத்துவிட்டான்.
எதற்கும் இவர்களை கட்டிப்போட்டு-விடலாம்.
அத்தனை சீக்கிரத்தில் சுயவுணர்வு திரும்பப் போவதில்லை இவர்களுக்கு !


சீக்கிரம் ஆகட்டும்...
வெளியே காவல் இருக்கிறது என்று நினைக்கிறேன் !
தொல்லை நம்மை நோக்கி வரும்வரை பதுங்கியே இருப்போம்.
நாம் வெளியேறி-விடாமலிருக்க சுரங்கப் பாதைக்கும் செயிண்ட் மௌர் காவல் போட்டிருப்பார்.. அது டாரண்ட் உள்ளே நுழையும் வாய்ப்பை வெகுவாக பாதிக்கும். நாம் இங்கிருந்து வெளியேறி கவனத்தை திசை திருப்பியாக-வேண்டும்...
அவர்களே வந்துவிட்டார்கள் !
அதோ இருக்கிறார்கள் பார் !
மாடஸ்டி முன்னால் வந்தாள்.
இன்னொரு ஜோடி மாடஸ்டியையும் கார்வினையும் நெருங்கியது.
முதலில் சாக விரும்புவது யார் ?
51


அதற்கு உன்னைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறோம் நாங்கள் !
எதிரி தன் ஆயுதத்தை ஓங்கியபோது மறைவிடத்திலிருந்து வெளியே வந்தான் கார்வின்.
யாரென்று திரும்பாமலே சொல் பார்க்கலாம் !
திகைத்து நின்ற இன்னொருவனை மாடஸ்டி தாக்கினாள்.
ஆ...!
ஆராய்ச்சிக்கு இது நேரமல்ல..
மிதமிஞ்சிய தன்னம்பிக்கை இவர்களுக்கு !
இந்தப் பகுதியை குதிரை வீரன் ஒருவன் காத்துநிற்கிறான்.


சுரங்கப் பாதையிலுள்ள காவலர்களை நான் திசை திருப்பி கொண்டு-வருகிறேன்...அதற்குள் நீ அந்தக் குதிரையை கவர்ந்துகொண்டு மத்திய ஹாலில் காத்திரு !
ஓ-கே !
குதிரையுடன் ஹாலுக்கு வருவதா ?
தருணத்தை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்தான் கார்வின்.
மெள்ள சரிந்து கீழே தரையில் விழுந்த கார்வின் சுயவுணர்வற்றவன்போல் கிடந்தான்.
மேலேயிருந்து யாரோ அவனை தள்ளிவிட்டிருக்க-வேண்டும் !
உயிர் இருக்கிறதோ இல்லையோ ?
அவன் தன்னை நோக்கி குனிந்தபோது கார்வின் மின்னலென செயல்பட்டான்.
மிரட்சியடையாதே கண்ணு ! வில்லி மாமா நல்லவன் !
53


மாளிகையினுள்ளே...
இங்கேயேதான் நின்றுகொண்டிருக்கிறோம் — அவர்கள் வரவில்லை ஜானி !
மாடஸ்டி தன்னை வெளிப்படுத்திக்கொண்டாள்.
ஜானி... என்னைத்தான் தேடுகிறீர்களா ?
ஹேய்...
வெளியேற இந்த வழியைத்தான் தேர்ந்தெடுப்பார்கள் என்று எதிர்பார்த்தேன் -- உள்ளே என்னதான் செய்துகொண்டிருக்கிறார்களோ ?
ஆமாம் உன்னைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன் — கொல்வதற்காக
பிடியுங்கள் அவளை !
மாடஸ்டி ஓடத்தொடங்கினாள்.
மலைச்சரிவின் மறுபக்கம்...
புதரினூடே சுரங்க நுழைவாயிலை தேடி கண்டுபிடித்து விட்டோம் ஸார் !
வாருங்கள் உள்ளே செல்லலாம்.
எப்படிப்பட்ட எதிர்ப்பு உள்ளே இருக்குமென்று எதிர்பார்க்கிறீர்கள் ஸார் ?
கமாண்டோ முறை...!


மாடஸ்டி சொன்னவாறு மத்திய ஹாலுக்கு வந்தான் கார்வின்.
துப்பாக்கியை அவர்கள் பயன்படுத்தமாட்டார்கள் என்று எதிர்பார்க்கலாம்.
கொஞ்சம் பொறுமையாக இரு... சீமாட்டியொருத்தி இங்கே வந்து சேர்ந்ததும் நாம் ஓடிப்-போயிடலாம்!
உஷ்...காலால் தரையில் தட்டி ஓசை-யெல்லாம் எழுப்பக்கூடாது மண்டு! யாராவது கேட்டால் ஆபத்தாகிவிடும்!
மின்னலென பாய்ந்தோடி வந்தாள் மாடஸ்டி.
தப்பிவிட-முடியாது பெண்ணே
மாடத்தில் தோன்றினாள் மாடஸ்டி.
வில்லி!
இலக்கு வைத்துக் குதித்தாள் மாடஸ்டி!
ஹா... தப்பி-விட்டாள்!


அந்தக் கோடாரியை என்னிடம் கொடுத்து-விட்டுப் பின்னால் ஏறிக்கொள்ளுங்கள் வில்லி !
அவர்களை மடக்கியாக வேண்டும்.
தூக்குபாலம் தூக்கிக் கட்டியநிலையிலிருக்கிறது அவர்கள் தப்பியோடிவிட முடியாது !
ஹூம்... அவர்கள் மட்டும் என் கையில் சிக்கட்டும்...!
விலகி ஓட்டு மாடஸ்டி !
இல்லை... அவன் கையிலிருக்கும் ஆயுதம் நமக்குத் தேவை !
கையிலுள்ள கோடாரியைப் பயன்படுத்தி அவனை வீழ்த்து கார்வின்.
கார்வினின் குறி தப்பவில்லை !
ஹா ஆ ஆ...!



தூக்கு பாலத்தை செயிண்ட் மௌர் எனக்கு நேற்று காட்டினார்...அதன் அமைப்பு எனக்கு அத்துபடி... இவனிடமுள்ள ஆயுதத்தைப் பறித்து எடுத்துக்கொள் !
பாலத்தை அவர்கள் இறக்குமுன் நாம் அங்கே சென்றுவிட வேண்டும்—ஓடி வாருங்கள் !
பாலத்தை இறக்கி அவர்கள் தப்பியோடினாலும் மைதானத்தை கடந்து வெளியேறிவிடுமுன் அவர்களை பிடித்துவிடலாம் ஏனெனில் ஒரே குதிரையில் இருவர் பயணம் செய்கின்றனர்.
பாலத்தோடு இணைக்கப்பட்டிருந்த சங்கிலியை தகர்த்தான் கார்வின்.
தூக்கிய நிலையிலிருந்த பாலம் ஓசையோடு கீழே விழுந்தது.
ம்...சீக்கிரம்—அவர்கள் நெருங்கிவிட்டார்கள்.
சுரங்கப்பாதையிலிருந்து வெகு தொலைவுகொண்டு வந்துவிட்டோம்—டாரண்ட் உள்ளே நுழைய இனி தடையிராது.


சுரங்கப் பாதை வழியே டாரண்டின் ஆட்கள் உள்ளே வந்தனர்.
எதிர்ப்பார் யாருமில்லை... ஸார்!
ஆச்சரியமாக இருக்கிறது..யாரோ நமக்காக இந்த வசதியை உண்டு பண்ணியிருக்கிறார்கள்.
காப்டன் நீங்கள் இந்த வெடிகுண்டின் அருகே பாதுகாப்பாக நில்லுங்கள்... மற்றவர்கள் மாளிகையினுள் செல்லட்டும்!
அவசியப்பட்டால் துப்பாக்கியை பயன்படுத்த அவர்களுக்கு அனுமதியளிக்கலாமா ஸார்?
நமக்கு வேண்டிய நபர்கள் இருவர் உள்ளே உயிருக்குப் போராடிக்கொண்டி- ருக்கிறார்கள் — அவர்களை காப்பாற்ற நீங்கள் எந்த நடவடிக்கையில் இறங்கினாலும் எனக்குச் சம்மதமே!
எதிர்ப்பை சீக்கிரமே முறியடிக்க வேண்டியது அவசியம்!
நல்லது ஸார்... சார்ஜண்ட் கிளம்புங்கள்!
செயிண்ட்-மௌர் பின்தொடர்ந்து வரக்கூடும்.
பாரம் காரணமாக குதிரை வேகமிழந்து விட்டது
மைதானத்தில் சுதந்திரமாகத்திரியும் கொடிய விலங்குகள் வேறு!
சுற்று வேலியை நெருங்கிவிட்டால் கம்பிகளினூடே புகுந்து தப்பி விடலாம்...


குதிரை எப்படி கம்பிகளினூடே புகமுடியும்? — அல்லது நாம் இதை சிங்கத்திற்கு இரையாக விட்டு-விடுவதுதான் நியாயமாகுமா?
ம் வந்து — ஆகாது!
எங்கோ ஓரிடத்தில் கதவுகள் இருக்கத்தான் வேண்டும்...குதிரை சிங்கத்திற்கு இரையாவதை நான் விரும்பவில்லை!
உன் பிடிவாதத்தால் சிங்கத்திற்கு நாமே இரையாகிப் போவோமோ என்று அஞ்சுகிறேன் நான்.
செயிண்ட் மௌர் ஆத்திரத்தோடு குதிரையை விரட்டிக்கொண்டு வந்தான்.
ஹே..சிங்கத்தைக் கண்டு மிரட்சியடை-கிறாயா? பையா — நானிருக்கும்போது பயமேன். உம்.. விரைந்து செல்!
சீமாட்டி மாடஸ்டி.. பிரபு வில்லி!.. தைரியமிருந்தால் நேருக்கு நேர் சந்தித்து போரிடுங்கள் கோழைகளைப் போல் ஓடி ஒளியவேண்டாம்!
என் உதவியில்லாமல் உயிரோடு நீங்கள் வெளியேறுவது சாத்தியமல்ல!
செயிண்ட் மௌரின் குரல்தான் அது!


குறிவைத்துப் பாய்ந்தது சிங்கம்.
ஆண்டவனே !
குதிரையின் பலத்த கனைப்பும் அதைத் தொடர்ந்து விலகிச்செல்லும் குளம்பு ஒலியும் அவர்கள் செவியை வந்தடைந்தன.
சிங்கத்தால் மட்டுமே செயிண்ட் மௌரை வீழ்த்த முடியும் !
அதோ..ஓட்டுநர் இல்லாமல் தனித்துச் செல்கிறது குதிரை !
ஓடு..உன் இருப்பிடம் போய் சேர் !
வில்லி..வாருங்கள்
பொறு..கையில் ஆயுதம் வைத்திருக்கும் நான் சொல்கிறேன் முதலில் !
செயிண்ட் மௌர் விழுந்துகிடந்த இடத்தை அவர்கள் சென்றடைந்தனர்.
வேறு விலங்குகள் இங்கு வந்து சேராமலிருக்க வேண்டும்.
சிங்கத்தை துரத்த வேண்டும்...
தன்னைத் துன்புறுத்தி வலையில் பிடிக்கும் விளையாட்டை அது இரசித்திராது.
பழிவாங்க தருணம் பார்த்துக்-கொண்டிருந்திருக்கும் !



கவனம் !
மண்டியிட்டு நீண்ட வாளினால் சிங்கத்தைச் சீண்டினாள் மாடஸ்டி !
வலி தாளாமல் கதறிய சிங்கம் விலகி ஓடத் தொடங்கியது.
ஊய்ய்...!
கீழே அமர்ந்து செயிண்ட் மௌரின் கையை எடுத்து உயிரோட்டம் இருக்கிறதா என்று ஆராய்ந்தான் கார்வின்.
திரும்பவந்து தாக்கிடக்கூடும் !
செயிண்ட மௌர் கதி என்ன ஆயிற்று என்று பார்ப்போம் !
ஹூம்... பிரயோஜனமில்லை.
முதல் பாச்சலிலேயே குரல்வளையை கடித்துக் குதறிவிட்டிருக்கிறது.
ஓ-கே ! நம் வேலை முடிந்துவிட்டது !



நீங்கள் எங்கேயும் போகமுடியாது...
ஜானியை கொன்ற உங்களை உயிரோடு செல்ல விடமாட்டோம் !
மாடஸ்டியையும் கார்வினையும் சூழ்ந்து கொண்டுவிட்டார்கள்.
ஜானியைக் கொன்றது நாங்களல்ல— சிங்கம் !
ஜானி இறந்துவிட்டார்.. அனைத்தையும் இழந்து-விட்டோம் நாம் !.. பாக்கியிருக்கும் ஒருவேலை — இவர்களிருவரையும் கொன்றுதீர்ப்பதுதான் !
என்ன செய்யலாம் மாடஸ்டி ?
தாக்கிக்கொண்டே முன்னேறி வியூகத்தை உடைக்கவேண்டியதுதான் ! பின்னாலிருந்து யாரும் தாக்காதவாறு நான் பார்த்துக்கொள்கிறேன் !
திடீரென்று துப்பாக்கியோசை அந்தப் பிராந்தியத்தில் எதிரொலித்தது.
யாரும் அசையக்கூடாது.. அப்படியே நில்லுங்கள் !




லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும், ஆசிரியரும் : S. விஜயன்
வெளியீடு எண்: 11 முகவரி: லயன் காமிக்ஸ், தபால் பெட்டி எண் 55, சிவகாசி - 626 123. போன்: 1159.

Printed at the Muthu Fine Art Publications, Sivakasi


லயன் காமிக்ஸின்
அடுத்து வரவிருக்கும்
வெளியீடுகள் !!
ஸ்பைடர்
தோன்றும்
பழி வாங்கும்
பொம்மை
ரூ. 2/.
C.I.D. லாரன்ஸ் தோன்றும்
காணாமல் போன
கடல்!
ரூ. 2/.
குதிரை வீரன் ஆர்ச்சி
ரூ. 2/.


யார் அந்த
மினி
ஸ்பைடர்?
ரூ. 2/-


சைத்தான் விஞ்ஞானி
ஸ்பைடர் சாகஸம்
ரூ. 2/-


C.I.D. ஜான் மாஸ்டர் தோன்றும்
மாஸ்கோவில்
மாஸ்டர்

# உங்கள் பக்கம்

நாம் அனுப்பும் ஒவ்வொரு கார்டையும், கவரையும் டெலிவரி செய்வதில் தபால் இலாகாவிற்கு சில பைசாக்கள் நஷ்டமாகின்றன என்பது தெரியுமா?

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், மார்ச் வெளியீடான "கடத்தல் குமிழிகளை" விமர்சிக்கும் சாக்கில் ஏகப்பட்ட வாசகர்கள், வெள்ளமாய் விமர்சனங்களைக் குவித்து, தபால் இலாகாவிற்கு எக்கச்சக்கமான வேலையைக் கொடுத்துவிட்டார்கள்! குறிப்பாக, முதலிரண்டு வகாசகர்களும் தலா 6,11 கார்டுகள் எழுதி எம்மை அசர வைத்து விட்டார்கள்!

தபால் துறைக்கு நீங்கள் ஏற்படுத்திய சிறு நஷ்டம் எமது பெரும் லாபம்! இல்லை என்றால் இத்தகைய சுற்றுண்டு போன்ற விமர்சனங்களை தெரிந்து கொள்ள முடியுமா?

தொடர்ந்து உங்கள் கடிதங்களை எழுதி வாருங்கள் வாசகர்களே!

● அஷ்டகோணலான முகம்! ஒரு வலைத் துப்பாக்கி! இரண்டு சகாக்கள்! ஒரு ஹெலி-கார்! இவைகளை வைத்துக் கொண்டு ஸ்பைடர் நிகழ்த்தும் ஒவ்வொரு சாகஸமும் அட்டகாசம்! ஸ்பைடரை எதிர்த்து எந்த வேறு கதாபாத்திரமும் நிற்க முடியாதுதான்!

ஸ்பைடருக்கு இணை ஸ்பைடரே!

-பி. பாலசுப்பிரமணியன், கரூர்.

(ஆர்ச்சியை மறந்து விட்டீர்களா ஸார்? ஸ்பைடருக்கு இணையாய் சாகஸம் செய்யக்கூடிய ஒரு வீரன் காமிக்ஸ் உலகில் உண்டென்றால் அது ஆர்ச்சியாகத்தான் இருக்க முடியும்! இல்லையா? - ஆர்)

● எந்தப் புத்தகத்தையும் ஒரு முறையே படிக்கும் பழக்கமுடைய நான் "கடத்தல் குமிழிகளை" பத்து தடவை படித்து மகிழ்ந்தேன். ஸ்பைடருக்கு ஒரு வேண்டுகோள். இவ்வளவு பெரிய குற்றவியல் மேதையான தாங்கள் ஆர்ட்டினி, பெல்ஹாம் போன்ற அயோக்கியர்களை துணைக்கு வைத்துக் கொள்ள வேண்டாம்.

-ராஜி நவி, புதுவை.

● பழிவாங்கும் பொம்மை - மிஸ்டர் மர்மம் - யார் அந்த மினி ஸ்பைடர் - சதி வலை - விளம்பரங்களைப் பார்க்கும் பொழுதே நாவில் எச்சு ஊறுகிறது! இதை எல்லாம் உடனே படிக்க வேண்டுமென்ற ஆவலை அடக்க முடியவில்லை! லயன் காமிக்ஸை உடனடியாக மாதம் இரு முறையாக ஆக்கிவிடுங்கள்!

-எம். சுகுமார், புதுக்கோட்டை.

● சி ஐ.டி. லாரன்ஸ் கதை தாமதமாக வரும் என்பதை கண்டு ஆழ்ந்த துயரில் ஆழ்ந்தேன்!

உடனே வெளியிடுங்கள்!

-க. மகேந்திரன், ஒரத்தநாடு.

(64ம் பக்கத்தைப் பாருங்கள் வாசகரே! உங்கள் துயர் நீங்கிவிடும்! - ஆர்)

● "கடத்தல் குமிழிகள்" மிக அருமையாய் இருந்தது. படிக்காமல் புத்தகத்தை கீழே வைக்க முடியவில்லை இது போன்ற தரமான புத்தகங்களை வெளியிடுவதற்கு "லயன் காமிக்ஸ்" -ஐ விட்டால் வேறு வழியில்லை.

-மு. சாமுவேல், திண்டுக்கல்.


மே 15ல் வருகிறது!
கோடை ஸ்பெஷல்
C.I.D. ஜான் மாஸ்டர் தோன்றும்
சதி வேலை!
ரூ.4/-
மற்றும்
துப்பறியும் கம்ப்யூட்டரும் இரும்புமனிதன் ஆர்ச்சியின் சாகஸமும்!


விரைவில் வெளிவருகிறது!
திகில்!
விபரங்கள் உள்ளே!